**சுருக்கம்**

கலையும் பண்பாடும் – புதுதில்லி, தமிழ்நாடு இல்லம், பொங்கல் விழா 2018 – தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியது – உள்ளபடியாக ஏற்பட்ட செலவினங்கள் ரூ.3.60 இலட்சத்தில் ரூ.3.00 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு மற்றும் ரூ.60,000/–ஐ மன்றத்தின் நல்கையிலிருந்து மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை**

அரசாணை (ப) எண்.52

நாள்: 16–04–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், சித்திரை 3

படிக்கப்பட்டது

1. புதுதில்லி தமிழ்நாடு இல்லம், முதன்மை உள்ளுரை ஆணையர் அவர்களின் நேர்முகக் கடித எண் 10–2/HTC/PRC/HD/2017, நாள் 28.12.2017
2. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றக் கடித எண் 1934/அ1/2017, நாள் 09.01.2018, 11.01.2019 மற்றும் 27.01.2019
3. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண். 8012 / இ1 / 2017, நாள்: 11.01.2018 மற்றும் 11.03.2019

*****

**ஆணை:–**

கிராமியக் கலைகள் நம்முடைய பண்பாட்டை வெளிக்கொண்டு வரும் ஒரு கருவியாக பயன்படுகிறது. தமிழ் பண்பாட்டை கற்க விரும்புபவர்களுக்கு தமிழக கிராமியக் கலைகள் பற்றிய புரிதல் வேண்டும். ஏனெனில் அவை மரபுவழியாக நிகழ்த்தப்பட்டு வருபவை.

2. புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில் 2009ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளையொட்டி “பொங்கல் விழா” கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறை சார்பாக ஒவ்வொரு ஆண்டும் தமிழக பாரம்பரிய கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விழாவினைக் காண பல்வேறு பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் அதிக அளவில் வந்து கூடுவர்.

3. புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில் 12.01.2018 முதல் 14.01.2018 வரை மூன்று நாட்கள் நடத்தப்பட்ட பொங்கல் விழாவில் தமிழக அரசின் சார்பாக தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் காவடியாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், தப்பாட்டம் ஆகிய கிராமியக் கலை நிகழ்ச்சிகளை கீழே அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு நடத்தியதற்கு ஏற்பட்ட செலவினம் ரூ.3,60,000/– தொகையினை மன்றத்தின் உறுப்பினர்–செயலாளரின் ஒப்புதல் பெறப்பட்டு, மன்ற நிர்வாகம் மற்றும் கலைத்திட்டப்பணி கணக்கு எண் 6707207475லிருந்து மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும், மேற்காணும் செலவினத் தொகையினை 2018–2019ஆம் நிதியாண்டில்

2205 00 102 JA 0933 என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.2.65கோடி நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்து உரிய அரசாணையினை வழங்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், கலை பண்பாட்டு ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

அட்டவணை

| கலைக்குழு | கலை நிகழ்ச்சிகள் (3 நாட்களுக்கு) | மதிப்பூதியம் (ரூ) | போக்குவரத்து, பயணப்படி, ஒப்பனை, ஒத்திகை, இடைநிகழ் செலவினம் உள்ளிட்ட செலவினங்களுக்கான தொகை (ரூ) | ஒட்டு மொத்தத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| கலைமாமணி தேன்மொழி ராஜேந்திரன் கலைக்குழு, தஞ்சாவூர் (20 கலைஞர்கள்) | கரகம் – 6 கலைஞர்கள் காவடி– 2 கலைஞர்கள் நையாண்டிமேளம் – 6 கலைஞர்கள் (நாதசுரம்–2 + தவில் – 2 + பம்பை – 2) தப்பாட்டம் – 6 கலைஞர்கள் | 1,20,000 | 80,000 | 2,00,000 |
| தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையம், மதுரை (16 கலைஞர்கள்) | தேவராட்டம் – 8 கலைஞர்கள் (தேவராட்டம் – 6 + உறுமி –2) | 40,000 | 30,000 | 70,000 |
| | ஒயிலாட்டம் – 8 கலைஞர்கள் (ஒயிலாட்டம் – 6 + இசைக்குழு–2) | 40,000 | 30,000 | 70,000 |
| | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் (கலைமாமணி முனைவர் தி.சோமசுந்தரம்) | | | 20,000 |
| | **மொத்தம்** | | | **3,60,000** |

4. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையரின் கோரிக்கையினை ஏற்று, புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் 12.01.2018 முதல் 14.01.2018 வரை மூன்று நாட்கள் நடத்தப்பட்ட பொங்கல் விழாவில், கலை பண்பாட்டுத் துறையின் சார்பாக தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தியதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத் தொகையான ரூ.3.60 இலட்சத்தில் ரூ.3,00,000/–க்கு

(ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், கூடுதல் தொகையான ரூ.60,000/–ஐ மன்றத்தின் நல்கையிலிருந்து செலவு செய்தமைக்கு பின்னேற்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

> “2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை”
> (த.தொ.கு.2205 00 102 JA 30903)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்குவதற்குரிய அதிகாரம் கலை பண்பாட்டு ஆணையருக்கு அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 105/முதன்மைச் செயலாளர் (செலவினங்கள்)/2019, நாள் 15.04.2019ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
தலைவர் / உறுப்பினர்–செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை – 28 (கலை பண்பாட்டு ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை– 9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
<u>நகல்:–</u>
நிதி (கல்வி–II)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–1 / பொது) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பிரிவு அலுவலர்

16.4.19